**வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் (பொ) செயல்முறைகள்**

**ந.க.எண். 3135/ஆ3/202 5 நாள். .09.2025**

.....

பொருள் .. பள்ளிக்கல்வி – வேலூர் மாவட்டம் – 2025-2026 ஆம் கல்வியாண்டு – மன்றச் செயல்பாடுகள் – வட்டார அளவிலான போட்டிகளில் வெற்றி பெற்ற 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம், சிறார் திரைப்பட மன்றங்களுக்கான மாவட்ட அளவிலான போட்டிகள் நடைபெறுதல் – சார்ந்து.

பார்வை ..

1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செல்முறைகள் ந.க.எண். 34784 எம்1 /எஸ்1/ 2025 நாள். 17.07.2025, 11.08.2025, 25.08.2025
2. தமிழ்நாடு பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள் சென்னை-6 ந.க.எண். 34874/எம்1/இ1/2025 நாள். 19.09.2025

.....

பார்வை (1) ல் காணும் செயல்முறைகளின்படி, 2025-2026 ஆம் கல்வியாண்டில், 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கான இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம் மற்றும் சிறார் திரைப்பட மன்றங்களுக்கான பள்ளி மற்றும் வட்டார அளவிலான போட்டிகள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளன.

தற்போது பார்வை 2ல் காணும் செயல்முறைகளின்படி, இலக்கிய மன்றம் சார்ந்த ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்ற மாணவர் மற்றும் வினாடி வினா மன்றப் போட்டியில் முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பெற்ற இரு குழுக்களும் மற்றும் சிறார் திரைப்படம் சார்ந்த ஒவ்வொரு போட்டியிலும் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு அடுத்த நிலை போட்டியான மாவட்ட அளவிலான போட்டிகள் கீழ்கண்டாவாறு நடைபெறவுள்ளது.

| மாவட்ட அளவிலான மன்றச் செயல்பாடு போட்டிகள் | | | |
|---|---|---|---|
| வ. எண் | போட்டி | போட்டி நடைபெறும் நாள் மற்றும் நேரம் | போட்டி நடைபெறும் பள்ளியின் பெயர் |
| 1 | இலக்கிய மன்றம் (தமிழ்/ஆங்கிலம்) | 07.10.2025 (செவ்வாய்கிழமை) காலை 9.30 மணி | ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர் |
| 2 | வினாடி வினா மன்றம் | 08.10.2025 (புதன்கிழமை) காலை 9.30 மணி | |
| 3 | சிறார் திரைப்படம் | 09.10.2025 (வியாழக்கிழமை) காலை 9.30 மணி | |

எனவே கீழ்காணும் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி வட்டார அளவிலான மன்றப்போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களை மாவட்ட அளவில் நடைபெறும் போட்டியில் தவறாமல் பங்கேற்கச் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

வழிகாட்டு நெறிமுறைகள்

- மாவட்ட அளவிலான மன்றப் போட்டிகளுக்கு மாணவ, மாணவிகளை பாதுகாப்பாக அழைத்துச் சென்று மீண்டும் கொண்டு வந்து சேர்த்தல் சார்ந்த பள்ளித் தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களின் பொறுப்பாகும்.
- மாவட்ட அளவிலான போட்டிகளுக்கு செல்லும் மாணவர்களின் பெற்றோர்களிடமிருந்து ஒப்புதல் கடிதம் (Consent Letter from parent) கட்டாயமாக பெறப்படுதல் வேண்டும். அவ்வாறாக பெறப்படும் ஒப்புதல் கடிதங்களை முறையாக பராமரித்தல் சார்ந்த தலைமையாசிரியன் பொறுப்பாகும்.
- மாவட்ட அளவிலான போட்டிகளில் பங்கேற்கச் செல்லும் மாணவ, மாணவியருடன் ஒரு ஆண் ஆசிரியர் ஒரு பெண் ஆசிரியை கட்டாயம் உடன் செல்லுதல் வேண்டும்.
- இலக்கிய மன்றப் போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெறும் வெற்றியாளர், அடுத்த நிலைப் போட்டியான மாநில அளவிலான போட்டியில் பங்குபெறுவர்.
- வினாடி வினா மன்றப் போட்டியில் முதலிடம் மற்றும் இரண்டாமிடம் பெறும் இரு குழுக்களும் அடுத்த நிலைப் போட்டியான மாநில அளவிலான போட்டியில் பங்குபெறுவர்
- சிறார் திரைப்பட மன்றப் போட்டிகளில் ஒவ்வொரு போட்டியிலும் முதல் இடம் பெறும் வெற்றியாளர், அடுத்த நிலைப் போட்டியான மாநில அளவிலான போட்டியில் பங்குபெறுவர்

மாவட்ட அளவிலான மன்றச் செயல்பாடு போட்டிகளான இலக்கிய மன்றம், வினாடி வினா மன்றம் மற்றும் சிறார் திரைப்படம் போட்டிகளுக்கான தலைப்புகள் மற்றும் வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்களின் விவரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்காணும் படி நடைபெறும் மாவட்ட அளவிலான மன்ற செயல்பாடு போட்டிகளில் வட்டார அளவில் வெற்றி பெற்ற 6 முதல் 9 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்கள் அனைவரும் தவறாமல் போட்டியில் கலந்துக்கொள்ள உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு சார்ந்த நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு மீள தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு –

1. மாவட்ட அளவிலான தமிழ் / ஆங்கிலம் இலக்கிய மன்றப் போட்டிகளுக்கான தலைப்புகள்
2. மாவட்ட அளவிலான வினாடி வினா மன்றப் போட்டிக்கான வழிமுறைகள்
3. மாவட்ட அளவிலான சிறார் திரைப்படம் மன்றப் போட்டிக்கான தலைப்புகள்
4. வட்டார அளவில் வெற்றி பெற்ற மாணவர்கள் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர் (பொ),
வேலூர்.

பெறுநர் –

1. மாவட்டக் கல்வி அலுவலர்கள்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக) பள்ளிகளுக்கு தகவல் தெரிவிக்கும் பொருட்டு
2. தலைமையாசிரியர்கள்,
   சார்ந்த நடுநிலை / உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள், வேலூர் மாவட்டம்.

நகல்–

1. சென்னை – 6, பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. உதவி திட்ட அலுவலர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, காந்திநகர்,
   வேலூர் மாவட்டம். (இவ்லுவலக மின்னஞ்சல் மூலமாக)
3. வட்டாரக் கல்வி அலுவலர்கள்,
   வேலூர் மாவட்டம். (மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக் கல்வி) மூலமாக)
4. பள்ளித் துணை ஆய்வாளர்கள்,
   (முதன்மைக் கல்வி அலுவலகம் / மாவட்டக் கல்வி அலுவலகம் (இடைநிலை)
   வேலூர் மாவட்டம் (உரிய அலுவலர் மூலமாக)
5. மாவட்ட ஒருங்கிணைப்பாளர் (DC),
   உதவி திட்ட அலுவலகம், காந்திநகர்
   வேலூர் மாவட்டம். (உதவி திட்ட அலுவலர் மூலமாக)
6. தலைமையாசிரியர்,
   ஸ்ரீ வெங்கடேஸ்வரா மேல்நிலைப் பள்ளி, வேலூர்.
   (போட்டி நடைபெறுவதற்கான போதிய வசதி செய்து தர தெரிவிக்கப்படுகிறது.)